**அம்பலாங்கொடை நகர சபை**
**காலி மாவட்டம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 12 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 அக்தோபர் 27 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து அம்பலங்கொடை நகர சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினை அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டிற்கான ரூபா 255,742 தொகை கொடுப்பனவு நடைமுறை ஆண்டிற்கான செலவுகளுக்கு வரவு வைத்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான செலவுகள் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பெறவேண்டிய முத்திரை கட்டண வருமானம் ரூபா 14,758,140 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான வருமானம் மற்றும் பெற வேண்டிய மீதி குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 246,483 தொகையினை கணக்கீடு செய்திருக்காமையால் வருமானங்கள் மற்றும் பெறவேண்டிய மீதி குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) 02 நிர்மான வேலைகள் தொடர்பாக அம்பலாங்கொடை பிரதேச செயலகத்தில் இருந்து பெற வேண்டிய ரூபா 209,324 தொகை நிதிக்கூற்றுக்களில் செலுத்த வேண்டிய தொகை எனக் காட்டப்பட்டிருந்தமையால் அதே பெறுமதியினால் கடன் கொடுத்தோர் மிகையாகவும் மற்றும் கடன் பட்டோர் அதே பெறுமதியினால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களிலுள்ள கூட்டுத்தொகை ரூபா 51,476,993 தொகைக்கான 14 கணக்கு விடயங்களுக்கான மீதிகள் மற்றும் தொடர்புடைய துணைப் பதிவேடுகள் /

அட்டவணைகளின் பிரகாரம் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 44,631,211 இற்கான சமமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) ஒன்றிற்கு ஒன்று சமப்பட வேண்டிய ஊழியர் பிணை வைப்பு மீதி மற்றும் ஊழியர் பிணை முதலீட்டுக் கணக்கு மீதிகளிடையே ரூபா 26,826 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 06 வருடங்களை விட மிகையான காலம் முதல் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 8,334,529 தொகைக்கான வாடிவீட்டு வாடகை மற்றும் மின்சார சபையில் இருந்து பெற வேண்டிய நட்டஈடு ரூபா 6.402,250 தொகையும் உற்பட மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 109,338,404 தொகையினைத் தீர்த்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 70,727,474 தொகை காணப்பட்டது. இந்த மீதிகளில் அடங்கியுள்ள கூட்டுத்தொகை ரூபா 6,995,459 தொகைக்கான மீதிகள் தொடர்பான காலப்பகுப்பாய்வுக் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுகளின் பிரகாரம் உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைப் பங்களிப்பு தொகையின் கூட்டுத்தொகை ரூபா 11,166,432 தொகையாகக் காணப்பட்டது.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள ரூபா 73,913,952 தொகைக்கான பஸ் தரிப்பிட நீர் செயற்திட்டகணக்கு, கூட்டுத்தொகை ரூபா 73,251,732 தொகைக்கான செலுத்த வேண்டிய கணக்குகள் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 8,869,302 தொகைக்கான நிலுவை வருமானக் கணக்கு தொடர்பான கோவைகள் மற்றும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்களும் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 77,767,795 தொகைக்கான 05 நிலையான சொத்து விடயங்கள் தொடர்பாக நாளதுவரையான மற்றும் முறையாக பேணப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்றும், சமர்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமாக பரிசோதனை செய்வதற்கு முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 110 | காணாமல் போதல், சேதமடைதல் மீதான அறிவிப்பதற்கான படிவத்தின் பிரகாரம் 11 கோடுகளைக் கொண்ட நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

(ii) நிதிப்பிரமாணம் 396(ஈ) நகர சபையின் இரண்டு வங்கி நடைமுறைக் கணக்குகள் தொடர்பாக வழங்கப்பட்டிருந்த ஆனால் கொடுப்பனவுக்காக சமர்பிக்கப்படாத செல்லுபடியாகும் காலத்தினை மிகைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 96,305 தொகைக்கான 17 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

--------------------

### 2.1 நிதி விளைவுகள்

--------------------------

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 22,050,881 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,757,495 ஆக காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 7,293,386 இற்கான வளர்ச்சி ஒனறினை காட்டியது.

### 2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

-----------------------------------------------------------

முன்னைய ஆண்டுகளுக்கு ஒப்பாக நடைமுறை மற்றும் விரைவு விகிதாசாரங்கள் சிறிய அளவு வளர்ச்சி ஒன்றினை காட்டிய போதிலும், பெற வேண்டிய கடன்பட்டோர் மீதியில் காலங்கடந்துள்ள கடன்பட்டோர் மீதி ரூபா 14,736,779 தொகை காணப்பட்டமையால் நடைமுறை மற்றும் விரைவு விகிதாசாரம் திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 2.3 வருமான நிருவாகம்

--------------------------------

#### 2.3.1 வீத வரி

-------------

மீளாய்வாண்டின் போது அறவிடப்படவேண்டிய ரூபா 19,452,886 இற்கான வரித் தொகையில் ரூபா 6,645,518 தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவைத் தொகை ரூபா 12,807,368 தொகையாகிய உயர்ந்த பெறுமதியினை கொண்டிருந்தது. நிலுவை வீதவரியை அறவீடு செய்வதற்காக நகரசபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

### 2.3.2 வாடகை

மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு கடைகளில் இருந்து ரூபா 3,083,090 இற்கான நிலுவை வாடகை மீதி ஒன்று அவதானிக்கப்பட்டதுடன், நிலுவை வரி அறவீடு செய்வதற்கான நகர சபை கட்டளைச் சட்டத்தின் 170(அ)(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3.3 முத்திரை கட்டணம்

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு போது ஏனைய வருமான நிலுவை மீதியில் உட்படுத்தப்பட்டிருந்த பெறவேண்டிய முத்திரை கட்டண வருமானம் ரூபா 51,518,405 தொகையாக காணப்பட்டது. அவற்றில் ரூபா 49,859,838 இற்கான தொகையொன்று முன்னைய ஆண்டை விட முந்திய காலத்தை சேர்ந்த பெற வேண்டிய காசு மீதியொன்றும் காணப்பட்டது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்றுகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 முதல் 2019 வரையான நகர சபையின் நான்காண்டு காலத் திட்டத்தின் கீழ் 29 நிர்மாண வேலைகள் செயற்படுத்துவதற்கு மற்றும் அலுவலகத்தை நவீன மயப்படுத்துவதற்காக ரூபா 19,320,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அவ்வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நகர சபையின் அதிகார பிரதேசத்தில் 07 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக கிடைத்திருந்த ரூபா 4,741,579 இற்கான தொகையொன்று அச்செயற்திட்டம் செயற்படுத்தப்படாமல் 04 வருடங்கள் முதல் 07 சேமிப்புக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ திறமையின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆளணி சேர்ப்பு திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 13 வெற்றிடங்கள் மற்றும் அங்கீகரிக்கப்படாத 20 பதவிகளில் மிகையும் காணப்பட்டது. மிகைப் பதவிகளை முறைப்படுத்துவதற்கு அல்லது வெற்றிடங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) சபையில் கடமையாற்றி ஓய்வு பெற்ற மற்றும் இடமாற்றம் பெற்று சென்றுள்ள மூன்று ஊழியர்களிடமும், 55 அமைய மற்றும் பிரதியீட்டு ஊழியர்களிடமும் அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 282,190 தொகைக்கான பதவியணிக் கடன் மீதியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) நகர சபைக்குச் சொந்தமான மீன் வர்த்தக தொடர் கட்டிடம் உடன்படிக்கையின் பிரகாரம் ஒரே தடவையில் பெறும் பணத்தை அறவீடு செய்யாமல் வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு இறுதியளவில் ரூபா 259,584 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்ட போதிலும், அப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து 1988 இல் பெற்றிருந்த ரூபா 51,792,000 இற்கான கடன் தொகையின் தவணைப் பணத்தை செலுத்துதல் 2010 ஜுன் 30 திகதியின் பின்னர் நடைபெற்றிருக்காதமையால் மீளாய்வாண்டு இறுதி அளவில் செலுத்த வேண்டியிருந்த நிலுவை கடன் தொகை ரூபா 33,857,798 தொகையாக இருந்ததுடன், இதற்கு மேலதிகமாக ரூபா 40,980,107 இற்கான வட்டி தொகை ஒன்றும் செலுத்த வேண்டி நேரிட்டிருந்தது.

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) (i) வாடகை செலுத்துவதை 03 மாதங்கள் இடையறாது புறக்கணித்தால் நிலுவை வாடகையை அறவீடு செய்தல் தொடர்பாக நகர சபை கட்டளை சட்டத்தின் 170 (அ) (1) பிரிவின் பிரகாரம் செயற்படமுடியுமெனினும், அதற்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை.

(ii) உடன்படிக்கையின் 5.3.2 இலக்க நிபந்தனையின் பிரகாரம் நீர் மற்றும் மின்சாரம் கடை வாடகையாளரினால் பொறுப்பேற்க வேண்டுமெனினும், மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி வரை 14 கடைகளில் இருந்து ரூபா 48,400 இற்கான நீர்க்கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) ஆளணி கோப்பு திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த நிரந்தர பதவியாளரின் சம்பளம் மற்றும் படிகள் மாத்திரம் உள்ளுராட்சி ஆணையாளினால் மீளளிப்பு செய்யப்படுகின்றமையால், சபையினால் சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்களின் சம்பளம் மற்றும் படிகள் செலுத்துவதற்காக சபையின் வருமானத்திலிருந்து ரூபா 7,746,591 தொகை செலவிடுவதற்கு நேரிட்டிருந்தது.

(இ) நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 164(2) இன் பிரகாரம் சுற்றுலா அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்த ஹோட்டல்கள், தங்குமிடங்களின் அனைத்து வருமானங்களின் மீதும் அறவிடப்படும் 1 சதவீத வரியினை அறவீடு செய்யும் போது ஹோட்டல்கள் ஒன்றில் இருந்தேனும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் சமர்பித்திருக்கவில்லை.

### 3.4 ஒப்பந்த நிருவாகம்

---

ரூபா 640,000 இற்கான மதிப்பீடு ஒன்றின் மீது ஓகந்த பொது குளிக்கும் கிணற்றை மறுசீரமைப்பதற்கான நிர்மான வேலை செயற்படுத்தும் போது கிணற்றை சுற்றியுள்ள பகுதி உடைந்து விழுந்தமையால் ஏற்பட்டிருந்த ஆபத்து நிலைமையின் காரணமாக பொறியியல் உதவியாளரின் ஆலோசனையின் பிரகாரம் ரூபா 53,300 மேலதிக செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டு கிணறு மூடப்பட்டிருந்தது. ஒப்பந்த வேலை நிறைவேற்றிய சங்கத்தினால்

அதுவரை மேற்கொள்ளப்பட்ட வேலைகளுக்காக ரூபா 148,760 தொகைக்கான பில் பத்திரம் ஒன்று சமர்பிக்கப்பட்டிருந்தது.

## 3.5 விளைவற்ற / குறைவாக பயன்படுத்தப்படும் சொத்துகள்

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை வளவில் உக்கக்கூடிய நிலையில் காணப்படும் டிரக்டர் வண்டி ஒன்றும், ரூபா 259,000 கிரயத்தையுடைய முச்சக்கர வண்டி ஒன்று மற்றும் ரூபா 432,500 தொகைக்கான கைடிரக்டர் ஒன்று என்பவற்றை பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்காக 2017 ஜுன் 21 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுகளில் களஞ்சிய மீதியில் உள்ளடங்கியிருந்த 2014 ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்திருந்த ரூபா 181,197 தொகை பெறுமதியான மரத்தொக்கு 2017 ஜுன் 21 வரை களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) உடல் விருத்தி நிலையமொன்று தயாரிப்பதற்காக மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக கூட்டுத்தொகை ரூபா 3,302,458 இற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 2015 அக்தோபர் மாதம் முதல் அதனைப் பயன்படுத்தியிருக்கவில்லை.

## 3.6 திண்மக் கழிவு பொருள் முகாமைத்துவம்

-------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(அ) நகர சபையின் குப்பை முகாமைத்துவம் தொடர்பான முறையான நடைமுறையொன்று கடைபிடிக்கப்பட்டிருக்காததுடன், நாளாந்தம் சேகரமாகும் குப்பைகளில் உக்கக்கூடிய குப்பைகளை மொன்டோரியாவத்தை குப்பை தளத்திற்கு அனுப்புவதற்கும் உக்காத குப்பைகளை கொழும்பு பாதைக்கு 500 மீட்டர் தொலைவில் உள்ள ஹல்வதுர எனும் சதுப்பு நிலத்திற்கு குவிக்கப்பட்டு, 3 மாதங்களுக்கு ஒருமுறை மண் போடப்பட்டு மூடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு காணப்பட்டது. குப்பைகள் காணியில் குவிக்கப்படுவதினால் நுளம்புகள் மற்றும் கொசுக்கள் மிகைத்திருத்தல் அதிகாரப் பிரதேசத்தின் பொதுமக்களை சுகாதாரத்திற்கு அனுகூலமான நிலைமை ஒன்று ஏற்பட்டிருந்தது. அதேபோல குப்பைகள் கொட்டப்படும் வளவுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றிருக்கவில்லை

(ஆ) நகர சபை அதிகார பிரதேசத்தில் குப்பை முகாமைத்துவ செயற்திட்டமொன்று ஆரம்பிப்பதற்காக கிடைத்திருந்த இயந்திரமொன்று 2012 ஆண்டிற்கு முன்னர் இருந்து எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. இந்த இயந்திரம் தொடர்பான தகவல்கள் ஏதும் சபையில் காணப்படாததுடன் அதன் பெறுமதியும் நிதிக்கூற்றுகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளங்கிய 07 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 46,014,168 தொகைக்கான சேமிப்பும், 02 செலவு விடயங்களின் வரையறைகளை மிகைத்து மேற்கொள்ளப்பட்டிருந்த செலவுகள் ரூபா 590,203 தொகையும், 06 வருமான விடயங்களின் நெருங்கியிருக்காத இலக்கு வருமானம் ரூபா 39,416,443 தொகையாக காணப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் (தென் மாகாண) இன் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/நவலே கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சபையினால் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் என அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களைச் செயற்படுத்துதல்

2009 ஜூன் 09 ஆந் திகதி DMA/2009 (i) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்காக மீளாய்வாண்டு இறுதிவரை சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| முறைமைகள் | முறைமையில் முக்கிய குறைபாடுகள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) மீளாய்வாண்டிற்கான உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளை சரியான முறையில் இனங்கண்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சில விடயங்களுக்காக சான்றுகள் சமர்பித்திருக்கவில்லை. |
| | (iii) நான்கு ஆண்டுகளை விட மிகையான காலம் முதல் காணப்படும் கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | (iv) சில மூலதனச் செலவுகளை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை. |
| (ஆ) வாகனக் கட்டுப்பாடு | (i) சபைக்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | | (ii) எதுவித செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படாமல் மூன்று வாகனங்கள் சபை வளவில் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது. |
| (இ) | பதிவேடுகள் பேணப்படல் | (i) சபையினால் வாகனப் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.<br>(ii) நட்டங்கள் சேதங்கள் தொடர்பான தகவல்கள் உட்படுத்தப்பட்டு நட்டங்கள் சேதங்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை.<br>(iii) அட்டவணைகளுடன் பேரேட்டு கணக்குகளின் மீதிகள் ஒன்றிற்கு ஒன்று இணங்கியிருக்கவில்லை. |
| (ஈ) | வருமானம் சேகரித்தல் | (i) நிலுவை வருமானத்தை அறவீடு செய்தல் பலவீன நிலைமை ஒன்றில் காணப்பட்டது.<br>(ii) முத்திரைக் கட்டண வருமானம் நாளதுவரை அறவீடு செய்தவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>(iii) 4 வருட காலத்தை மிகைத்துள்ள நிலுவை கடை வாடகை காணப்பட்டது.<br>(iv) வீதவரி அறவீடு செய்தல் மந்த நிலைமையில் நடைபெற்றுள்ளது. |
| (உ) | பணிப்பாளர் குழு முகாமைத்துவம் | (i) நகர சபையின் அமைய / பிரதியீட்டு 20 மிகை ஊழியர்களின் பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>(ii) பதவிகளில் காணப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>(iii) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மிகைத்து ஆட்சேர்க்கப்பட்ட 08 பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு சபை நிதியத்திலிருந்து சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | (i) 07 செலவு விடயங்களினதும் மதிப்பீட்டு ஏற்பாடுகளில் சேமிப்புகள் காணப்பட்டன.<br>(ii) 02 செலவு விடயங்களில் அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளை மிகைத்து செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.<br>(iii) 06 வருமான விடயங்களின் மதிப்பீட்டு இலக்கை நெருங்குவதற்கு முடியாதிருந்தது.<br>(iv) மூலதனச் செலவுகள் மதிப்பீட்டு பெறுமதி மற்றும் உள்ளவாறான பெறுமதியிடையே வித்தியாசம் 50 சதவீதமாக காணப்பட்டது. |

(v) பாதீடு தொடர்பாக தொடர் செயல் நடவடிக்கை எடுத்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.